கோகுலம்

குழந்தைகள்
மாதமிருமுறை
1.7.1972
30காசு





PRATIBHA 1810-32-TAM



உம்மிடியார் ஜுவெல்லர்ஸ்

VRG

உம்மிடி ராமய்ய செட்டி, குருஸ்வாமி செட்டி & கோ.

23-25, நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் ரோட், சென்னை-1.

போன்: 31902 & 31758 — ஸ்தாபிதம்: 1905



இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H

அவர்களின் விஜயம்

சந்திக்கும் விலாசங்கள்

1-ந் தேதி திருநெல்வேலி: நெல்லை லாட்ஜ், காலை 8 மணி முதல் 12 மணி வரை.
1-ந் தேதி நாகர்கோவில்: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ணபவன், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
2-ந் தேதி மதுரை: மணீஸ் கபே, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை.
2-ந் தேதி புதுக்கோட்டை: வஸந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை.
3-ந் தேதி காரைக்குடி: AVM. PL. ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் 11 மணி வரை.
3-ந் தேதி அறந்தாங்கி: கோகுலம் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 1 மணி வரை.
3-ந் தேதி பட்டுக்கோட்டை: அசோகா லாட்ஜ், பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை.
3-ந் தேதி மன்னார்குடி: மன்னை லாட்ஜ், மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை.
4-ந் தேதி திருச்சி: ஹோட்டல் அஜந்தா, காலை 8 மணி முதல் 2 மணி வரை.
4-ந் தேதி கரூர்: பெரியார் உணவு விடுதி, மாலை 3-30 முதல் மாலை 5 மணி வரை.
5-ந் தேதி தஞ்சை: ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.
5-ந் தேதி திருவாரூர்: அபூபக்கர் பில்டிங், மாலை 2 மணி முதல் 4 மணி வரை.
5-ந் தேதி நாகை: தினகர விலாஸ், மாலை 5 மணி முதல் 7 மணி வரை.
6-ந் தேதி காரைக்கால்: அசோக் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.
6-ந் தேதி கும்பகோணம்: தாஜ்மஹால் லாட்ஜ், காலை 11 முதல் 2 மணி வரை.
6-ந் தேதி மாயவரம்: காளியாகுடி லாட்ஜ், பகல் 3 மணி முதல் 4-30 மணி வரை.
6-ந் தேதி கடலூர் N. T.: ஹோட்டல் பிருந்தாவனம், இரவு 7 முதல் 8-30 மணி வரை.
7-ந் தேதி பாண்டிச்சேரி: அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி போன்: 316] [தந்தி: சித்தர்






கோகுலம்

பரிதாபி, ஆனி 18

ஜூலை 1, 1972

மலர் 1 :: இதழ் 6



வண்ண வண்ணப் பொம்மையாம் - அது
வாடா மலர்ப் பொம்மையாம்
கண்ணைக் கவரும் பொம்மையாம் - அதன்
கையில் ஒரு பொம்மையாம் !

-- மகி. மகிமைநாதன்

(அட்டைப்படம் : உதயபாஸ்கர்)

தனிப் பிரதி விலை 30 காசுகள்

வருட சந்தா ரூ. 7-00
ஆறு மாதம் ரூ. 3-50

இலங்கை ஆண்டுச் சந்தா ரூ. 9-00
(இலங்கை நாணயப்படி)

இதர நாடுகள் ரூ. 18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.)

உயிர்களிடத்து
அன்பு வேண்டும் - தெய்வம்
உண்மையென்று
தானறிதல் வேண்டும்

- பாரதியார்

ஆத்திசூடி



ராஜாஜி

இணக்கமறிந் திணங்கு

உனக்குத் தகுந்த சிநேகிதன் அல்லது கூட்டாளி என்று தெரிந்து கொண்டுதான் நீ ஒருவனிடம் சேரவேண்டும். ஒருவன் நிலைமை, குணம் இவைகளை அறியாமல் சேரக் கூடாது.

இணக்கம் : இருவரும் ஒன்றாகச் சேரும் குணம், செல்வநிலை, உறவினர் முதலியன.

இணக்கம் இருந்தால் இருவருக்கும் ஒற்றுமையும், அன்பும், சுகமும் உண்டாகும். இல்லாவிடில் நன்மைக்குப் பதில் துக்கமே உண்டாகும்.

தந்தை தாய்ப் பேண்

பேண் : பாதுகாப்பாய்.

உன் தாயும் தகப்பனும் நோயாலோ, முதுமையாலோ உடல் வலி இழந்த காலத்தில் அவர்களுடைய மகனாகிய நீ அவர்களைக் காப்பாற்ற வேண்டும். மகனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் இது கடமை.



நன்றி மறவேல்

பிறனொருவன் உனக்குச் செய்த உதவியை மறவாதிருப்பாயாக உதவி வேண்டிய காலத்தில் பெற்றுக்கொண்டு பிறகு காலஞ் செல்லச் செல்லப் புதுக் கவலைகளினாலும் சுக துக்கங்களினாலும் மறந்து போகலாம். அப்படி மறக்கக் கூடாது. ஒருவன் உனக்கு ஏதாவது தீங்கு செய்தாலும் கூட அப்போது அவன் உனக்கு அதற்கு முன் எப்போதாவது செய்திருந்த நன்மையை நினைத்துக்கொள்.

பருவத்தே பயிர்செய்

பருவத்தே. சரியான காலத்திலே.

காலம் தப்பி என்ன பாடுபட்டாலும் வெள்ளாமை உண்டாகாது. இது பயிரிடுவதற்கு மட்டில் சொன்னதல்ல. எந்தக் காரியமும் காலம் அறிந்து தாமதிக்காமல் செய்து முடிக்க வேண்டும்.

மண்பறித் துண்ணேல்

பிறனுடைய நிலத்தைச் சேர்த்துக் கொண்டு உழுது பயிர் செய்வது மண்ணைப் பறித்துத் தின்ற மாதிரியாகும்.

மண் பறித்து: பிறனுடைய நிலத்தைக் கைப்பற்றி - **உண்ணேல்**: பயிரெடுத்து உண்டு வாழாதே. ''மன்று பறித்துண்ணேல்'' என்றும் பாடமுண்டு. இதன் பொருள்:

மன்று: வழக்கு தீர்க்கும் கூட்டம்.

மன்று பறித்தல் என்றால் வழக்குத் தீர்ப்பதற்காகக் கூட்டப்படும் பொதுக் கூட்டத்தில் உள்ளவன் சத்திய வழியில் நடந்து கொள்ளாமல் வழக்கில் உள்ள ஒருவனிடம் லாபம் பெற்று அநியான தீர்ப்புச் சொல்வது. இப்படி வாழ்வு நடத்துவது கூடாது. தொழில் செய்து பிழைக்க வேண்டும்.





கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

கண்ணனும் பலராமனும்

விஷ்ணுவின் யோக மாயையால் மயங்கிய யசோதை உணர்வு பெற்றாள். தன் அருகில் படுத்திருந்த ஆண் குழந்தையைக் கண்டாள். எல்லையில்லாத ஆனந்தம் கொண்டாள்.

கோடி மன்மதர்களின் அழகுகள் யாவும் திரண்டு ஒன்று கூடிய திருவுருவுடன் குழந்தைக் கண்ணன் விளங்கினான். பணிப் பெண்கள் ஓடி நந்த கோபனைப் பார்த்து ''ஐயனே! தங்கட்கு ஆண் மகவு பிறந்துள்ளது'' என்றார்கள்.

யசோதை கருவுற்றிருந்தபோது நந்த கோபன் ஒரு ஜோதிட சாஸ்திரியை அழைத்து, ''ஐயா! என் மனைவி கருவடைந்திருக்கிறாள். ஆண் மகவு பிறக்குமா? பெண் மகவு பிறக்குமா?'' என்று கேட்டான்.

குறிப்பறிந்த ஜோதிடன் 'ஆண் பிறக்குமா' என்று முதலில் கூறியபடியால், இவனுக்கு ஆண் மகவில் பிரியம் போலும் என்று ஊகித்துக் கொண்டான். சிறிது நேரம் விரல்களை மடக்கியும் கூட்டியும் சிந்திப்பவன் போல் நடித்து, ''ஆண் மகவு பிறக்கும்'' என்றான். நந்தகோபன் அவனுக்கு நூறு பொற்காசுகளை வழங்கினான். பொன் வேலை செய்யும் பொற் கொல்லரை அழைத்து ஆண் குழந்தைகளுக்கு உரிய அணிகலன்களைச் செய்வித்தான்.

யசோதை அதே ஜோதிடனை அழைத்து, ''ஐயா! எனக்குப் பெண் பிறக்குமா? ஆண் பிறக்குமா?'' என்று கேட்டாள்.

அவன், 'இவள் பெண் பிறக்குமா?' என்று முதலில் கூறியபடியால், இவளுக்குப் பெண்ணில் பிரியம் என்று ஊகித்து, ''அம்மா! பெண்தான் பிறக்கும்'' என்றான். யசோதை மகிழ்ச்சியடைந்து அவனுக்கு நூறு பொற்காசுகளை வழங்கினாள். நகை செய்யும் பொற்கொல்லரை அழைத்துப் பெண் குழந்தைக்குப் பூட்டும் அட்டிகை, புல்லாக்கு முதலிய அணிகலன்களைச் செய்தாள்.

கண்ணனைக் கண்ட நந்தகோபனும் யசோதையும் மகிழ்ந்து, ''ஆணும் நீ; பெண்ணும் நீ'' என்று கூறி இருவரும் செய்த அணிகலன்களைக் கண்ணனுக்கு இட்டார்கள். கண்ணனுக்கு இன்றும் ஓவியங்களில் புல்லாக்கு முதலிய அணிகளைப் பார்க்கலாம்.

கண்ணனைத் தொட்டிலில் இட்டு, சகல அணிகலன்களையும் பூட்டி, தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி கிருஷ்ணன் என்று பேர் சூட்டினார்கள்.

கண்ண பிரான் பிறப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் ரோகிணி வயிற்றில் பலராமர் பிறந்தார்.

இராமாவதாரத்தில் ஸ்ரீராமர் சீதையைத் தேடிக்கொண்டு சென்றார். இரவு வந்தது. வாயும் நாவும் புலர மயங்கினார்.

''இலட்சுமணா! தண்ணீர் கொண்டு வருக'' என்று பணித்தருளினார்.

நடு இரவு. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. முன் பின் தெரியாத வனம். கொடிய விலங்குகளின் பயங்கரக் குரல்கள். இராமர் நீர் கேட்டவுடன் இலட்சுமணர் உள்ளம் வருந்தினார். கேளா முன்னமே தருவதல்லவா அடிமையின் கடமை. கேட்கின்றவரை நான் தாமதித்திருந்தேனே என்று கருதினார். நீர் தேடிப் புறப்பட்டார். அயோமுகி என்ற அரக்கி இலட்சுமணனைக் கவர்ந்து சென்றாள்.

தம்பி திரும்பி வராமையால் வெம்பி இராமர் வருந்தினார். விரைந்து வரக் கூடிய அன்புடைய தம்பி வராமையால் மாண்டிருப்பானோ என்று ஐயுற்றார்.

''இந்தப் பிறப்பில் என் தம்பி என்னை உண்ணவைத்து அவன் உண்ணாதிருந்தான். என்னை உறங்குவித்து அவன் உறங்காதிருந்தான். பதினான்கு ஆண்டுகள் என் அருகில் இருந்து அரிய பணிகள் பல செய்தான். பணி செய்து நொந்து விட்டான். இதுபோன்ற தம்பி எங்கும் எவருக்கும் இருக்கவில்லை. தருமம் என்ற ஒன்று இருக்குமானால் மறு பிறப்பில் இலட்சுமணனுக்கு நான் தம்பியாகப் பிறந்து அவனுக்குப் பணி புரிந்து இந்தக் கடன்களைத் தீர்க்க வேண்டும்'' என்று தீர்மானித்தார்.

இந்த முடிவின்படி இலட்சுமணன் பலராமனாகப் பிறந்தான். ஆதிசேடன் வெள்ளைப்பாம்பு. நஞ்சு இல்லாதது. தருமத்தின் சொரூபம். ஆதிசேடன் இலட்சுமணன்; இலட்சுமணன் பல



ராமன். ஆதலால் பலராமர் பால் நிறம் படைத்து விளங்கினர்.

பலராமரும் கண்ணபிரானும் அவதரித்த சமயத்தில் எங்கும் மழை பொழிந்து விண்ணும் மண்ணும் குளிர்ந்திருந்தன.

நந்தகோபன் அளவற்ற மகிழ்ச்சியடைந்தான். அன்னதானம், கோதானம், பூதானம், சொர்ண தானங்கள் எல்லாம் செய்தான்.

கோபிகைகளும் ஆயர்களும் ஆடையணிகலன்கள் அணிந்து, ஆடியும் பாடியும் ஆனந்தமடைந்தார்கள்.

நந்தகோபன் தன் அரசனுகிய கம்சனுக்குக் கப்பம் கட்டும் பொருட்டு மதுரைக்கு வந்தான். அதையறிந்த வசுதேவர் நந்தகோபனைச் சந்தித்தார்.

நந்தகோபனை மார்புறத் தழுவிக் கொண்டார். ''நண்பரே! தங்கள் இல்லத்தில் எல்லோரும் நலந்தானே? என் மகன் பலராமனும் அவன் தாய் ரோகிணியும் நலமா? தங்கள் தவத்தால் பிறந்த கண்ணன் நலமா? ஆடு மாடுகளும், புல்வெளிகளும், நிலபுலன்களும், நன்கு செழித்துள்ளனவா?'' என்று நலம் வினவினர்.

நந்தகோபன் வசுதேவரை நன்கு உபசரித்தான். ''வசுதேவரே! எல்லாம் நலமே. தாங்கள் தங்கப் பதுமைகளைப் போன்ற அழகிய புதல்வர்களைப் பெற்றும் கம்சனுடைய கொடுமையால் இழந்து துயரம் அடைந்தீர். புத்திர சோகத்தினும் கொடியது மற்றென்றில்லை. உமது அவல நிலையை யறிந்து என் மனம் ஆருத் துயரம் அடைந்தது. எல்லாம் முன் வினைப்படி நிகழும். நம்மால் ஆவது ஒன்றுமில்லை. ஆவாரை யாரே அழிப்பர்? சாவாரை யாரே தவிர்ப்பர்? நீர் மனத்தைத் திடப்படுத்திக் கொள்ளும். உமக்கு எதிர்காலம் சிறப்பாக இருக்கும்'' என்றுன்.

வசுதேவர், ''நந்தகோபரே! கோகுலம் சிறக்கும். உமக்கு மகனுக வந்துள்ள கண்ணனுல் உமக்கு அழியாத சித்தியும் முக்தியும் உண்டாகும். கண்ணன் தெய்வீகமான பாலன். தேவாநுகூலன். பரமகுண சீலன். நீர் போய் வாரும்'' என்ருர்.

நந்தகோபன் கோகுலம் வந்து, கண்ணனை — மணிவண்ணனைக் காத்துக் கொண்டிருந்தான். (தொடரும்)





கிளி பேசியது

‘பாட்டி’

ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டை அடுத்து ஒரு சிற்றூர். ஒரு நாள் ஒரு மனிதர் அந்தக் காட்டின் வழியே நடந்து போய்க் கொண்டிருந்தார். வெய்யில் ஏற ஏற அவருக்கு ரொம்பவும் களைப்பாயிருந்தது. கையிலிருந்த மூட்டையையும் விசிறியையும் கீழே வைத்தார். அருகே ஓர் அழகிய புன்னை மரம் பூத்துக் குலுங்கிக்கொண்டிருந்தது. அதன் வேர்கள் மேடைபோல் அமைந்திருந்தன. அங்கேயே படுத்துக் கொண்டார் அவர்.

நல்ல காற்று. கொஞ்ச நேரம் தூங்கலாம் என்று நினைத்தார். அவ்வளவுதான்; மரத்தின் மேலிருந்து யாரோ வெகு கோபமாய்த் திட்டுவது கேட்டது. தூக்கி வாரிப் போட்டபடி எழுந்தார். ''அடே! யாரடா இங்கே வந்தாய்? ஆட்டுக் கறி அஞ்சு காசு; கோழிக்கறி மூணு காசு!'' என்றது அந்தக் கொடூரமான குரல்.

அவர் திகைத்துப் போனார். இது பேயோ, பிசாசோ, பூதமோ என்று பயந்து. மூட்டையைத் தூக்கிக்கொண்டு ஓடி அடுத்திருந்த இன்னொரு மரத்தினடியில் போய் நின்று இந்த மரத்தைப் பார்த்தார். மரத்தின் மேல் ஓர் அழகான பச்சைக் கிளி அமர்ந்திருந்தது. பட்டுப் போன்ற உடம்பு. பவழம் போன்ற வாய் சிவப்பாய் அழகாக இருந்தது. அந்த அழகான வாயிலிருந்தா இப்படி ஒரு பேச்சு!

இன்னொரு மரத்தடியை அடைந்தவர் களைத்துப் போனதால் சற்றே உட்கார்ந்தார். அங்கேயே படுத்தும் விட்டார். தூங்கவும் ஆரம்பித்தார். இனிமையான ஒரு குரல் கேட்டது. எழுந்திருக்க மனமில்லாமல் கேட்டார். அந்தக் குரல் என்ன கூறியது தெரியுமா?

''முனிவரே! வரவேணும், வரவேணும். தங்களது நல்வரவினாலே எங்கள் குடில் புனிதமாயிற்று. வாருங்கள்! வாருங்கள்! வந்து உட்காருங்கள்'' என்ற சொற்கள் அவரை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தன. நிமிர்ந்து பார்த்தார். இங்கேயும் ஒரு பச்சைக் கிளிதான்! அதே சாயல்; அதே அச்சு. ஆனால் பேச்சிலேதான் என்ன இனிமை, என்ன வணக்கம்! என்ன குழைவு!

''ஏ கிளியே! சற்று முன் ஆற்றங்கரை ஓரத்தில் அதோ அந்த மரத்தின் கீழே படுத்தேன். அந்த மரத்திலும் உன்னைப் போல் ஒரு கிளி. அப்பப்பா! அது பேசிய பேச்சும் வசவும் கேட்கச் சகிக்கவில்லை. நீயோ அதற்கு நேர்மாறாக இனிமையான சொற்களால் என்னை உபசாரம் செய்கிறாய். இதென்ன மர்மம்? எனக்கு விளங்கவே யில்லை'' என்றார் அந்த வழிப்போக்கர்.



கிளி பேசத் தொடங்கிற்று. ''சுவாமி! இதில் வேடிக்கை ஒன்றுமே இல்லை. நீங்கள் அங்கே பார்த்த கிளி என் தம்பிதான். நானும் அவனும் ஒரே தாயின் குழந்தைகள். எங்கள் தாயார் அதோ தெரிகிற மாந்தோப்பில் ஒரு கூட்டிலே எங்களை வைத்திருந்தார். அந்தச் சமயம் எங்களுக்கு நன்றாய்ப் பறக்கத் தெரியாது. கொஞ்ச தூரம் பறப்போம். மறுபடியும் கூட்டிலே வந்து உட்காருவோம். பகலில் பத்திரமாய் இருக்கும்படி சொல்லி அம்மா பறந்து போவாள். ஒரு நாள் ஒரு வேடன் மரத்தில் ஏறி எங்களைப் பிடித்து ஒரு கம்பிக் கூண்டிலே எடுத்து அடைத்துக் கொண்டு போனான். எங்களைக் கொன்று விடுவானோ என்று நடுங்கினோம். அம்மா அழுவாளே என்று நாங்களும் அழுதோம்.

''அவன் எங்களை விற்பதற்காக நகரத்துச் சந்தைக்கு எடுத்துப் போனான். போகும் வழியில் கம்பியை நெக்கித் தளர்த்தி நான் தப்பி ஓடிவேன். ஒரு முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தேன். அங்கே எப்பொழுதும் வேதம் ஓதுவார்கள். முனிவரும் மாணவர்களும் என்னை அன்புடன் வளர்த்தனர்.

''என் தம்பி நான் தப்பி ஓடியபோது கூப்பிடக் கூப்பிட எழுந்திராமல் தூங்கிக் கொண்டேயிருந்தான். எப்படித்தான் அவனுக்குத் தூக்கம் வந்ததோ?

''அவனை ஒரு கசாப்புக் கடைக்காரன் வாங்கினான். கூண்டிலே அடைத்துத் தன் கடையிலே கட்டி வைத்தான். மாமிசம் வாங்க வரும் மனிதர்களிடம் அவன் பேசும் பேச்சுக்களெல்லாம் இவனுக்குப் பாடமாகி விட்டன. முனிவர்கள் கூட்டுறவாலே நல்ல பேச்சுக்களும், வேதபாடங்களும் எனக்கு வந்தன. அவன் பாவம்! இப்படி ஆகிவிட்டான்!''

''கிளியே! உங்களாலே உலகத்துக்கு நல்லதொரு படிப்பினை கிடைத்தது. எந்தச் சூழ்நிலையில் யார் எப்படி வளர்கிறார்களோ அதன்படிதான் அவர்களுடைய குணங்களும் செயல்களும் இருக்கும் என்பதற்குச் சகோதரர்களாகிய நீங்களே சாட்சிகளாகிறீர்கள்'' என்றார் வழிப்போக்கராகிய அந்த அந்தணர்.





அநாதையை மணந்த அரசகுமாரன்

குண்டுமணி



அவள் ரொம்ப ரொம்ப ஏழை. அன்றாட உணவுக்குக்கூட வழியில்லாதவள். ஒரு நாள் அந்தப் பெண் ஒரு குடியானவனிடம் வந்தாள். அந்த ஊரில் அவன் செல்வாக்குள்ள விவசாயி. தனக்கு ஏதாவது வேலை தரும்படி கெஞ்சினாள். வேலை செய்தால் கிடைக்கும் கூலியைக் கொண்டு பசியாற்றிக் கொள்ளலாம் என்பது அவள் ஆசை.

ஏழைப் பெண்ணின் வேண்டுகோளுக்கு இரங்கிய விவசாயி தன் மாடுகளைக் கொண்டு போய் மேய்த்துவரும் வேலையை அவளுக்குக் கொடுத்தான். அடுத்த நாள் அந்தப் பெண் குடியானவனுடைய பசுக்களை மேய்த்து வர ஓட்டிச் சென்றாள். ஊருக்கு வெளியே இருந்தது புல்வெளி. அதை அடுத்து ஒரு காடு. சிறுமி மாடுகளை மேயவிட்டு ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்த போது கானகத்திலிருந்து ஒரு கர்ஜனை கேட்டது. வனராஜனான சிங்கத்தின் ஓலம்தான் அது. முதலில் அந்தப் பெண் பயந்தாலும் 'சிங்கத்துக்கு ஏதோ ஆபத்து. அதனால் தான் இப்படிக் கத்துகிறது' என்பதை ஊகித்துக் கொண்டு தைரியத்துடன் மெள்ள மெள்ளக் காட்டினுள் சென்றாள். அவள் எண்ணியபடியே அங்கு ஒரு சிங்கம் தன் முன்னங் கால்களில் ஒன்றைத் தூக்கி வைத்துக் கொண்டு வேதனை தாங்காமல் அழுதுகொண்டிருந்தது. அந்தக் காலில் ஒரு பெரிய முள் குத்தியிருந்தது. அந்த முள்ளை எடுக்கும் வகை தெரியாத சிங்கம் வலி தாங்காமல் அப்படிப் பலமாக ஓலமிட்டிருக்கிறது. சிறுமி தைரியமாக அதன் அருகே சென்று காலிலிருந்த முள்ளை எடுத்துவிட்டு ஒரு பச்சிலையைக் கசக்கிச் சாறு பிழிந்து அந்த இடத்தில் தடவினாள். சிங்கம் நன்றியறிதலுடன் அச் சிறுமியின் கையை நக்கிவிட்டுக் காட்டுக்குள் சென்றது.

சிறுமி தன் மாடுகளைத் தேடி வந்தாள். ஆனால் மேய்ந்து கொண்டிருந்த இடத்தில் மாடுகளையே காணோம். அவளுக்கு எப்படி இருக்கும்? நடுங்கினாள். பயமும் அழுகையுமாக வந்தன. விவசாயியிடம் வெறும் கையோடு போய் நின்றபோது அவர் சும்மாவா இருப்பார்? அடியும் உதையும் கிடைத்

தன. அவ்வளவையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டாள் அந்தச் சிறுமி. விவசாயி நல்லவர். அவளை விரட்டிவிடவில்லை. தம் ஆடுகளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பைக் கொடுத்தார் அவளிடம்.

மறுநாள் ஆடுகளை ஓட்டிக் கொண்டு போனாள் அந்தப் பெண். அன்றும் அதே போல் சிங்கத்தின் ஓலம் அவளை அழைத்தது. ஆடுகள் ஆனந்தமாகத் தழைகளைச் சுவைத்துக் கொண்டிருந்தன. சிறுமி கானகத்தினுள் சென்றாள். சிங்கத்தின் முகத்திலிருந்து ரத்தம் ஒழுகிக்கொண்டிருப்பதைக் கண்டாள் பதை பதைத்துப் போன அவள் பக்குவமாக அதன் காயத்தைத் துடைத்துப் பச்சிலைகளை வைத்துக் காட்டுக் கொடிகளால் கட்டுப் போட்டாள். சிங்கமும் காட்டுக்குள் போயிற்று. இவளும் தன் ஆடுகளைக் காண வந்தாள். ஆனால் ஆடுகள் அங்கு இருந்தால்தானே? ஓர் ஆட்டைக் கூடக் காணோம்.

மனம் நொந்துபோன அவள் அன்று தனக்குக் கிடைக்கப் போகும் அடி உதைகளை எண்ணி நடுங்கியபடியே வீட்டுக்கு வந்தாள். மாடுகளையும் ஆடுகளையும் இழந்த விவசாயி அவளுக்கு விருந்தா வைத்து வரவேற்பான்? சிறுமியின் உடல் ரணகளமானது. இந்தத் தடவையும் கூட அவன் அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணை விரட்டியடிக்கவில்லை.

''போனால் போகட்டும். என் கழுதைகளைப் பார்த்துக் கொள், ஜாக்கிரதையாக'' என்றான். அவளும் கழுதைகளை ஓட்டிக் கொண்டு போனாள், காட்டை நோக்கி. அதே கதைதான். சிங்கத்துக்கு உதவப் போகக் கழுதைகள் காணாமல் போயின. இந்தத் தடவை விவசாயியின் முன் போக அவளுக்குத் தைரியமில்லை. ஆகவே ஒரு பெரிய மரத்தின் மீதேறிச் சுற்று முற்றும் பார்த்தாள், தன் கழுதைகள் எங்காவது தென்படுகிறதா என்று. கழுதைகளைக் காணவில்லை. ஆனால் வெகு தூரத்தில் மலைகளுக்கிடையே ஒரு வாலிபன் வருவதைக் கண்டாள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே சட்டென்று அவன் மாயமாக மறைந்தும் விட்டான். ஏன் அப்படி? யாரோ அவனை இழுத்துச் சென்றிருக்க வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தாள் அவள். அதை அறிய மரத்திலிருந்து கீழே இறங்கி வாலிபனைக் கண்ட பாறைப்



பகுதிக்கு வந்தாள். அங்கு இரு பாறைகளுக்கு நடுவே கீழே பாதாளத்தில் அவள் மூன்று முறை சந்தித்த சிங்கம் தான் இருந்தது. வாலிபனைக் காணவில்லை. அவள் திகைத்துப் போய் நின்றபோது, சிங்கம் பேசியது:

''அன்புள்ளம் கொண்ட பெண்ணே! நீ பார்த்த வாலிபன் நான்தான். நான் ஓர் அரச குமாரனும் கூட. உன் அன்பைப் பெறச் சிங்கமாக மாறி வந்தேன். ஆனால் அப்போது இந்தக் குகைக்குரிய வனான ராட்சதன் உன் ஆடு, மாடு, கழுதைகளைக் கவர்ந்து போய் உனக்கு வேதனை கொடுத்து விட்டான். இப்போது என்னையும் நிரந்தரமாகவே சிங்கமாக்கி இங்கே அடைத்து விட்டுப் போயிருக்கிறான்'' என்றது.

சிறுமிக்கு அந்தச் சிங்க வாலிபனிடம் அன்பும் இரக்கமும் ஏற்பட்டது. ''உன்னை விடுவிப்பது எப்படி என்று தெரியவில்லையே?'' என்று வருந்தினாள்.

''ஓர் அழகிய அரசகுமாரியின் கூந்தலைக் கொண்டு நெய்த கைக்குட்டையை இந்த மந்திரவாதி அரக்கனுக்குப் பரிசாகக் கொடுத்தால் அவன் மனம் மாறும். என் பழைய உருவமும் கிடைக்கும்!'' என்றான் சிங்க உருவிலிருந்த இளவரசன்.

''எப்படியும் ஓர் அழகிய அரசகுமாரியின் கூந்தலினாலான கைக்குட்டையுடன் திரும்பி வந்து உன்னை விடுவிப்பேன்'' என்று கிளம்பினாள், அந்தத் துணிச்சல் மிக்க ஏழைச் சிறுமி.

நடந்து நடந்து ஒரு நகரத்தை அடைந்தாள். அந்த நகரத்தின் அரசகுமாரி அழகே உருவானவள். அவளுக்குப் பணிப் பெண்ணாகப் போய்ச் சேர்ந்தாள் சிறுமி. தலையலங்காரம் செய்வதில் வல்லவளான அந்தச் சிறுமியின் கைவண்ணத்தில் சொக்கிப் போனாள், அரசகுமாரி. தினம் விதம் விதமான முடி அலங்காரம் செய்தாள் ஏழைச் சிறுமி.

அரச குமாரியின் பூரண அன்பைப் பெற்றதும் அவளது தலை முடியில் ஒரு கற்றையைத் தனக்குப் பரிசாகக் கேட்டாள். அரச குமாரி ஒரு நிபந்தனையுடன் அவள் விருப்பத்துக்குச் சம்மதித்தாள். என்ன நிபந்தனை தெரியுமா? ''என் அழகுக்கேற்ற ஓர் அரசகுமாரனைத் தேடிக் கொண்டு வந்து கொடுக்க வேண்டும்'' என்பதுதான் ராஜகுமாரி விதித்த நிபந்தனை. ஏழைச்சிறுமி கலங்கவில்லை. சிங்க உருவில் உள்ள வாலிபனின் அழகில் அவளுக்கு அத்தனை நம்பிக்கை. அவனை மணக்கும் ஆசை அவள் நெஞ்சத்தின் ஓரத்தில் இருந்தாலும், அதைத் துறக்க முடிவு செய்தாள். அவனை உருமாற்றி இந்த அரசகுமாரியின் கணவனாக்கி மகிழத் தீர்மானித்தவளாக நிபந்தனையை ஏற்று அரசகுமாரியின் தலை முடியைப் பெற்றுக் கொண்டாள். அதைக் கொண்டு ஓர் அழகிய கைக்குட்டை நெய்து எடுத்துக்கொண்டாள். நேரே சிங்க ராஜகுமாரனைக் குகையில் அடைத்திருக்கும் மந்திரவாதி அரக்கனிடம் போய்த் தான் நெய்து கொண்டு வந்திருந்த கைக்குட்டையைக் கொடுத்து, ''சிங்க உருவில் இருக்கும் இந்த இளவரசனை உருமாற்றி எனக்குத் தரவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள்.

மந்திரவாதி கூறினான்: ''சிறுமியே, உன் துணிவையும், விடாமுயற்சியையும் தியாகத்தையும் பாராட்டுகிறேன். உனக்காகவே இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்கிறேன். சிங்கத்தைக் கொன்று அதன் ரத்தத்தை அதோ ஓடும் ஆற்று நீரில் கரைத்தால் இவன் தன் நிஜ உருவை அடைவான். அப்படியே செய்.''

சிறுமியின் உள்ளம் நடுங்கியது. இதில் ஏதாவது சூது இருக்குமோ என்று தவித்தாள். தன் கையால் சிங்கத்தைக் கொல்லத் தயங்கினாள். ஆனால் சிங்கம் மந்திரவாதி சொன்னபடியே செய்யும்படி தைரியமூட்டவே அப்படியே செய்தாள். என்ன விந்தை! ஆற்றிலிருந்து அழகே உருவாக அரச குமாரன் சிரித்துக்கொண்டு சிறுமியை நோக்கி வந்தான். அவளுக்கு மகிழ்ச்சியான மகிழ்ச்சி. மந்திரவாதிக்கு நன்றி கூறிவிட்டு இளவரசனுடன் அரண்மனைக்குப் போனாள், அரசகுமாரிக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற.

ஆனால்... தன் முன்னே நிறுத்தப்பட்டவனைக் கண்ட அரச குமாரி, ''அண்ணா! வந்தாயா?'' என்று தாவி அணைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள்.


மந்திரவாதியினால் கடத்திப் போகப் பட்ட அரச குமாரன் திரும்பக் கிடைத்தால் யாருக்குத்தான் ஆனந்தமாக இருக்காது? அந்த நாட்டு அரசர் அரசி எல்லாரும் ஏழைச் சிறுமியைக் கொண்டாடினார்கள். இளவரசன் தான் அவளையே மணந்து கொள்வதாகக் கூறினான் தன் தந்தையிடம்.

('சிறுமியையா?' என்று நீங்கள் முணுமுணுப்பது காதில் விழுகிறது. கதைக்காகச் சிறுமி என்று எழுதினேன். கதை முடிவு கட்டத்தை நெருங்கிய பிறகும் அவளைச் சிறுமியாக வைத்திருக்கலாமா? கதை கல்யாணத்தில் முடிய வேண்டாமா?)


எல்லாருடைய சம்மதமும் பெற்றுத் தன்னை மீட்ட பெண்ணையே மணந்து கொண்டு சிங்காதனம் ஏறினான் இளவரசன். நாத்தனாராகிய அரச குமாரிக்கு விதம் விதமாகத் தலையலங்காரம் செய்து விடுவதுதான் இப்போதெல்லாம் அரசியின் வேலை!

வீராதி வீரன் 6

கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..




பாகிஸ்தானியர் இடிபாடுகளை அகற்றுவதில் முனைந்திருக்கும் போது, லாரிக்குப் பின்னால் ரஹீம்...
ஜம்பு, கவனமாகக் கண் காணி. நான் இந்தப் 'பாரலை'மெள்ள உருட்டிப் போய் ஒளிய வைத்து விடுகிறேன்.
முட்டாள்கள், பெட்ரோல் டிரம்மைப் பறி கொடுத்தது தெரியாமல் வேகமாகப் போகிறார்கள். போகட்டும்.
பெட்ரோல் பாரலை அப்படியே உருட்டிக் கொண்டு போக முடியுமா? ஆகவே இடிபாடுகளிடையே பல பெட்டிக் கடைக்காரர்கள் விட்டுச் சென்றிருந்த பாட்டில்களையெல்லாம் சேகரித்து வந்தான். ஒவ்வொரு பாட்டிலையும் பெட்ரோலால் நிரப்பினான்.
நண்பனே, நீ நல்ல கழுதை. உனக்குத்தான் கொஞ்சம் சிரமம். இந்தப் பெட்ரோல் பாட்டில்களை அந்த விமானியிடம் கொண்டு சேர்க்க உன் உதவி அவசியம் தேவை.
ஆனால் ரஹீம் நினைத்தபடி பாகிஸ்தானியர் எல்லாரும் முட்டாள்களல்ல. லாரி சேர வேண்டிய இடத்துக்குப் போனதும் ஒரு ராணுவ அதிகாரியின் கழுகுப் பார்வையிலே....
ஹூ! இடியட். இங்கிருக்க வேண்டிய ஒரு 'பாரல்' எங்கே? ஏமாந்த பயல்களா! வழியில் லாரியை நிறுத்தினீர்களா? உடனே எல்லாப் பாதைகளிலும் பாராவை உஷார்ப் படுத்துங்கள். இழந்த எண்ணெய் பாரலை மீட்ட தீர வேண்டும்.
என் திட்டம் சுலபமாக அந்த விமானியிடம் போக முடியாது போலிருக்கிறதே. காவல் கெடுபிடி பலமாக இருக்கிறதே. யா, அல்லா!


ரஹீம் நம்பிக்கை இழந்து விடவில்லை.
குளிர் காய்ந்து கொண்டிருக்கும் அந்தக் குள்ளநரிகளின் மத்தியில் உள்ள கணப்புக்கு இந்த ஒரு பெட்ரோல் பாட்டிலைக் குறி பார்த்து வீசுகிறான்.
தீயின் நடுவிலே பெட்ரோல் பாட்டில் விழுந்து உடைந்ததும், அந்த எரிபொருள் தன் சொருபத்தைக் காட்டியதும்.
ஐயோ! செத்தேன்.
அம்மா, குண்டு வெடித்தது.....
சீக்கிரம் ஓடி வாருங்கள். வேறு பாகிஸ்தானிய வீரர்கள் வரு முன் நாம் இங்கிருந்து மறைந்து விட வேண்டும்.
தம்பி, இந்த உன் உதவியை நான் மறக்கவே மாட்டேன். என்னுடையது போர் விமானமல்ல. தனியாரின் சாமான் தூக்கிப் போகும் விமானம். கிழக்கு வங்கத்தின் மீது பறந்து வரும் போது எஞ்சினில் கோளாறு ஏற்பட்டது. பெட்ரோல் டாங்கியும் காலியாகி விட்டது. நல்ல வேளை நீ உதவி ஐயோ நான் பிழைத்தேன்.
இந்தியர்களுக்கு எங்கள் இதயத்தில் என்றுமே ஓர் இடம் உண்டு. எங்களுக்கு வாழ்வளிக்கப் போராடியவர்களாயிற்றே நீங்கள்.
போய் வருகிறேன் ரஹீம். பை, பை...! உன் உதவியை என் நாட்டுத் தலைவர்களிடம் சொல்லுவேன்.
உங்களுக்கு உதவ முடிந்ததைப் பாக்கியமாகக் கருதுகிறேன். சென்று வாருங்கள். ஜெய். பங்களாதேஷ்!
தொடரும்..

ஏமாறச் சொன்னது நானா?


ஆர். முத்துக்குமாரசுவாமி

கடலில் ஓர் ஆமை தன் குட்டியுடன் வசித்து வந்தது. கடலுக்கருகில் பாலைவனமும் இருந்தது. ''கடல் நீரை விட்டு வெளியே எங்கும் போய்விடாதே, பக்கத்தில் பாலைவனம் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் மணல்தான் இருக்கும் - அங்கே. தண்ணீரே இருக்காது. நிழல் தருவதற்கு மரங்களும் இருக்காது'' என்று எச்சரித்திருந்தது பெரிய ஆமை தன் குட்டியிடம்.

ஒரு நாள் காலையில் குட்டி ஆமை கடல் நீரை விட்டு வெளியே வந்தது. சுற்று முற்றும் பார்த்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரை கள்ளிச் செடிகள் தான் தென்பட்டன. அதில் நிறையப் பூக்கள் இருந்தன. பழங்களும் இருந்தன. கள்ளிப் பழங்களைச் சாப்பிடலாம் என்ற ஆசையோடு கிளம்பியது குட்டி ஆமை.

நெடுந்தூரம் ஊர்ந்து வந்தது. கள்ளிச் செடிகளைத் தவிர வேறு ஒன்றுமே காணப்படவில்லை. கடைசியில் பாலைவனத்துக்கே வந்து விட்டது சின்ன ஆமை. அப்போது சூரியன் உச்சிக்கு வந்திருந்தான். மணல் எல்லாம் கொதிக்க ஆரம்பித்தது. ஆமை வெய்யிலில் அகப்பட்டுக் கொண்டது. வெய்யில் முதுகில் சுரீர் என்று சுட்டது. கீழே மணல் காலைப் பொரித்தது. சூடு பொறுக்க முடியாமல் அங்கும் இங்கும் ஓடியது ஆமை. மறுபடியும் கடலுக்குப் போய் விடலாம் என்று திரும்பியது. எங்கும் நிழலே இல்லை. கள்ளிச் செடிகளின் நிழலில் தங்கித் தங்கி வந்தது. ஆமையின் வேகம் தெரியாதா? நடுப்பகல் ஆகிவிட்டது. கள்ளிச் செடிகளின் அடியிலும் இப்போது நிழல் இல்லை. கள்ளி முள் போல் குத்தியது. ஒரு பெரிய கள்ளிப் புதர் இருந்தது. அதன் அடியில் கொஞ்சம் நிழல். அதில் போய்த் தங்கியது. அந்நிழல் இல்லாவிட்டால் ஆமைக் குட்டி செத்தே போயிருக்கும். கடலுக்குத் திரும்பிப் போக முடியவில்லை.

அதனால் குட்டி ஆமை அழ ஆரம்பித்தது. மூத்தோர் சொல் வார்த்தைகளை அலட்சியம் செய்து வந்ததால் தானே இத்துன்பம் என்று வருந்தியது. பாலைவனத்தில் பேரீச்ச மரங்கள் சூழ்ந்த சோலை இருக்கும். அங்கு புல் வெளியும் உண்டு. அதில் ஓநாய் ஒன்று வாழ்ந்து வந்தது. ஓநாய் பொல்லாதது என்று தான் உங்களுக்குத் தெரியுமே? ஆமை அழும் சத்தத்தைக் கேட்ட ஓநாய் அது இருக்கும் இடத்தைத் தேடிக் கண்டு பிடித்தது. ஓநாயைக் கண்ட ஆமை பயத்தினால் இன்னும் பலமாக அழுதது. ஆமை அழுவதைப் பாடுவதாக எண்ணியது ஓநாய். ''உன் பாட்டு நன்றாக இருக்கிறது. எனக்கும் பாட்டுச் சொல்லிக் கொடேன்'' என்றது ஓநாய்.



''நான் பாடவில்லை; அழுகிறேன்'' என்று கூறியது ஆமை. ஓநாய் அதன் வார்த்தையை நம்பவில்லை. ''நீ எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்காவிட்டால் என்னுடைய மத்தியானச் சாப்பாட்டுக்கு நான் உன்னை விழுங்கி விடுவேன்'' என்று கூறித் தன் நீண்ட நாக்கையும் கூர்மையான பற்களையும் காட்டியது.

''நீ என்னை விழுங்கினால் என் ஓடு உன் தொண்டையைக் கீறிவிடும். என் ஓடு மிகக் கடினமாக இருக்கும். அத

னால் என்னை விழுங்குவதில் உனக்கு மகிழ்ச்சியே இருக்காது'' என்றது ஆமை. ஆமையின் ஓடு கடினமாக இருப்பதைப் பார்த்தது ஓநாய். அது சொல்வது உண்மைதான் என்றும் உணர்ந்தது. ''அப்படியானால் உன்னைத் தூக்கிச் சூடான வெய்யிலில் போட்டு விடுவேன்'' என்றது ஓநாய். ஆமைக்கு ஒரே நடுக்கம். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் துணிவுடன், ''என்னை வெய்யிலில் போட்டால் என் தலையையும் நான்கு கால்களையும் எனது ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளுவேன். வெய்யில் என்னை ஒன்றும் செய்யாது'' என்றது.

வேறு என்ன செய்யலாம் என்று சிந்தித்தது ஓநாய். சட்டென்று அதற்கு ஒரு யோசனை தோன்றியது. ''உன்னைத் தூக்கிக் கடலில் போட்டுவிடுவேன்'' என்றது ஓநாய்.


ஆமைக்கு 'மகிழ்ச்சியான மகிழ்ச்சி; ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. பயந்தது போல் நடுங்கியது. ''என்னைக் கடலில் தூக்கி எறிந்து விடாதே. அதை மட்டும் செய்யாதே!'' என்று ஓநாயிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டது ஆமை. உடனே ஓநாய் ஊளையிட்டது. ஆமையைக் கவ்விக் கொண்டுகடற்கரைப் பக்கமாக ஓடியது. ஒரு பெரிய பாறை மேல் ஏறியது. அங்கிருந்து கடல் நீருக்குள் ஆமையை விட்டெறிந்தது.

தாய் ஆமை கடலுக்குள் தன் குழந்தையைக் காணாமல் தேடிக் கொண்டிருந்தது. அப்போது மேலே இருந்து ஒரு பொருள் பொத்தென்று விழுந்ததும், அது என்னவென்று பார்த்தது. அது தன் குட்டிதான் என்பதை அறிந்து மகிழ்ந்தது. குட்டி ஆமை, தாய் ஆமையோடு சேர்ந்து கொண்டது. ஆமை செத்துக் கடலில் மிதக்கும் என்று காத்துக் கொண்டிருந்தது ஓநாய். வெகு நேரம் ஆகியும் ஆமை மேலே வராததைக் கண்டதும், அது தன்னை ஏமாற்றி விட்டது என்று உணர்ந்து கோபத்துடன் - ஊளையிட்டுக் கொண்டே பாலைவனத்துக்குள் ஓடியது ஓநாய்.



குட்டி ஆமை தாய் ஆமையிடம், பாலைவனத்தில் தான் பட்ட துன்பங்களையெல்லாம் சொல்லிச் சொல்லித் தேம்பியது. ''இனிமேல் நான் உன் வார்த்தையை மதிக்காமல் இப்படி நடக்கமாட்டேன். அதனால் நான் பட்ட வேதனை போதும்'' என்றது.

'சர்வாதிகார எலி!'



வாங்க வாங்க எலியாரே
வளையில் வாழும் எலியாரே!
பாங்கா யோடும் எலியாரே,
பதற்றம் ஏனோ எலியாரே!

குற்றம் என்ன புரிந்தீரோ?
குதித்துக் குதித்தே ஓடுகிறீர்,
புற்றில் புகுந்து மறுபடியும்
பூமியை நோக்கித் திரும்புகிறீர்!

பண்டம் யாவும் பதுக்குகிறீர்,
பாழாய்ப் பொந்தில் ஒதுக்குகிறீர்;
அண்டா சட்டி பானைகளை
அசைத்துச் சாய்த்தே நொறுக்குகிறீர்!

சேதம் வீட்டில் ஏராளம்,
'செல்லம்' உமக்குத் தாராளம்!
மீதம் அனைத்தும் உம்(கு)கையில்,
மிஞ்சும் வேதனை எம்நெஞ்சில்!

பூனையின் வாய்க்குத் தப்புகிறீர்,
'பொறி'யிற் சிக்கவும் தயங்குகிறீர்!
ஆனைத் தந்திரம் செய்தாலும்
ஆட்டி வைக்கிறீர் எங்களையே!





புளியங்குடி ச. ஆ. கேசவன்

எண்களே எந்தன் கண்களே!

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்ற முதுமொழி உங்களுக்கெல்லாம் தெரியும். எண் — அதாவது கணக்கு - என்றால் உங்களில் சிலருக்குக் கசப்பாக இருக்கும். பலருக்குக் கற்கண்டாக இனிக்கும். எண்களின் ஆதிக்கம்தான் இந்த உலகத்தை ஆட்டி வைக்கிறது. விஞ்ஞானமும் வியாபாரமும் வாழ்க்கை முறைகளும் எண்கள் (கணக்கு) இல்லாவிட்டால் எப்படி இயங்க முடியும்? ஆற்றில் போட்டாலும் அளந்து போடு என்பது பழமொழி. ஆகவே எதற்கும் கணக்கு அவசியம். கணிதம் தெரிந்தவன் வாழ்க்கையில் எளிதில் முன்னேறி விடுவான். கீழே சில கணக்குகள் உங்கள் கணிதத் திறமையைச் சோதிப்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எங்கே பார்க்கலாம், உங்கள் கணித மேதைத் தன்மையை!

★ முதல் படத்தின் நடுவில் 15 மட்டும் இருக்கிறது. மற்றக் கட்டங்களில் இருக்க வேண்டிய எண்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த எண்களை எந்தெந்தக் கட்டங்களில் பொருத்தினால் எப்படிக் கூட்டினாலும் கூட்டுத் தொகை 45 வரும்?

★ இரண்டாவது படத்தில் ஐந்து கட்டங்களில் எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. காலியான நான்கு கட்டங்களில் தகுந்த எண்களைப் போடுங்கள். மேலிருந்து கீழாக மூன்று வரிசை குறுக்காக இரு வரிசை இடமிருந்து வலமாக மூன்று வரிசை ஆக எட்டு வரிசைகளைக் கூட்டினால் ஒவ்வொரு வரிசைக்கும் கூட்டு எண் 27 வரவேண்டும்.

★ மூன்றாவது படத்தில் உள்ளே இருக்க வேண்டிய எண்களெல்லாம் வெளியே வந்து கொலு வீற்றிருக்கின்றன. அவைகளை முறைப்படி அமைத்தால் (எட்டு வரிசையிலும்) ஒவ்வொரு வரிசையின் கூட்டுத் தொகை 24 வர வேண்டும்.


★ நாலாவது படத்தில் மாற்றம். ஏழு வரிசைகளின் கூட்டுத் தொகையை அதன் முடிவில் குறிப்பிட்டிருக்கிறது. ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களை அந்தக் கூட்டுத் தொகை வரும்படி அமைக்க வேண்டும்.


★ இரண்டாவது படத்தைப் போலவேதான் ஐந்தாவதும். அம்புக் குறியிட்ட ஆறு வரிசைகளில் ஒரு வரிசையின் கூட்டுத் தொகை 21 வரும்படி எண்களைக் காலிக் கட்டங்களில் நிரப்புங்கள்.


★ ஆறாவது படத்தில் காலியான பத்து வட்டங்களில் இருக்க வேண்டிய எண்கள் வெளியே வந்து நிற்கின்றன வரிசையாக. அவைகளை அதனதன் இடத்துக்கு விரட்டி அம்புக் குறியிட்ட வரிசைகளில் (பத்து) கூட்டினால் ஒரு வரிசையின் கூட்டுத் தொகை 102 வரவேண்டும்.


★ ஏழாவது படத்தில் A B C D E F G H குறித்த எட்டு வட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வீட்டுக்கும் உரிய எண்கள் வெளியே தரப்பட்டிருக்கின்றன. அவைகளை முறைப்படி அமைத்து நான்கு பக்கம் கூட்டினாலும் ஒரு பக்கத்தின் கூட்டுத்தொகை 20 வர வேண்டும்.


கணக்கில் 'புலி'யாக இருப்பவர்களுக்கு: விடைகள் 20-ம் பக்கத்தில்)























‘காலை வேளையில் காப்பி சாப்பிடாவிட்டால் ஒரு காரியமும் ஓடமாட்டேன் என்கிறது.’ என்று கூறும் பெற்றோர்களை உங்களில் பலருக்குத் தெரியும். ‘காப்பி’ குடிக்காததால் பித்துப் பிடித்தவர்களைப் போலத் தவிப்பவர்கள் பலர். தலைவலி வந்து அவதிப்படுபவர்கள் அநேகர். நம் நாட்டில் — முக்கியமாகத் தமிழ்நாட்டில்—தேயிலையை (டீ) விடக் காப்பியின் ஆதிக்கம்தான் அதிகம். இந்தக் காப்பியின் பெருமையை முதன் முதலில் அறிந்தவர் யார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. காப்பியின் தோற்றத்துக்குப் பலிதமான கதைகள் சொல்லப்படுகின்றன. ஆதியில் எதியோபியர்கள் காப்பித் தூளுடன் எண்ணெய் அல்லது கொழுப்பு இவைகளைக் கலந்து உணவுப் பொருளாகப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. எதியோப்பியர்களை அராபியர்கள் சிறைப்பிடித்து அடிமைகளாக்கிக் கொண்டு வந்தபோது அவர்களிடமிருந்த இந்த விநோதமான சுவையோடு கூடிய உணவைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். எதியோபிய அடிமைகளிடமிருந்து அராபியர்களுக்குக் காப்பியின் அருமை தெரியலாயிற்று. இப்படியொரு கதை.

ஏமன் நாட்டில் ஒருவகைச் செடி தன்னிச்சையாக ஏராளமாக வளர்ந்திருந்தது. ஒரு நாள் ஓர் அராபிய ஆடு மேய்க்கும் சிறுவன் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டான். அவனது ஆடுகள் அந்தச் செடியின் பழங்களைத் தின்றுவிட்டுத் துள்ளிக் குதித்து ஓடின. ரொம்பவும் மகிழ்ச்சியோடு ஓடி விளையாடின. பையன் அந்தச் செடியின் பழங்களைச் சேகரித்துக் கொண்டு ஊருக்குள் வந்தான். தங்கள் இனத்தில் முதியவர்களிடம் அதைக் கொண்டு வந்து கொடுத்துத் தான்கண்டதைக் கூறினான். அவர்கள் அந்தப் பழங்களில் உள்ள விதைகளை எடுத்து நொறுக்கிக் கஷாயம் வைத்து ருசி பார்த்தார்கள். கசப்பாக இருந்தாலும் அதைக் குடித்த பிறகு புது உற்சாகமும் தென்பும் ஏற்படுவதைக் கண்டார்கள். காப்பி பிறந்த கதை இப்படித்தான் என்கிறது இன்னொரு வரலாறு. எப்படியோ காப்பி பானத்தை உலகுக்கு வழங்கிய பெருமை அராபியர்களையே சேருகிறது.

எதியோபியாவில் விளையும் தாவரத்திலிருந்து விதைகளைச் சேகரித்து அதை வறுத்துப் பொடியாக்கி அதில் கொதிக்கும் நீரைக் கலந்து கஷாயம் தயாரித்து அருந்தி வரலானார்கள் அராபியர்கள். இந்தப் பானம் தயாரிக்கும் முறையைத் தங்களுக்குள்ளேயே ரகசியமாகவும் வைத்திருந்தார்கள் இருநூறு வருஷங்களுக்கு மேலாக. பதினாலாவது நூற்றாண்டில் காப்பி தயாரித்துப் பருகும் கலையைத் தெரிந்து கொண்ட அராபியர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் பதினாறாம் நூற்றாண்டில்தான் அறிந்தார்கள். போதை தரும் பானங்களை அருந்துவது கூடாது என்று முஸ்லிம்களின் வேதமான குரான் கூறுகிறது. ஆகவே மதப் பற்றுடைய அராபியர்கள் காப்பியை ரகசியமாகத் தயாரித்து அருந்தி வந்தனர். அல்லது வைத்தியர்களால் இது மருந்தாகத் தரப்பட்டது. காப்பியின் புகழ் வேகமாகப் பரவாததற்கு இவையும் காரணங்களாகலாம். மெல்ல மெல்லக் ‘காப்பி’ என்ற இந்தப் பானம் ‘குற்றமற்றது. இனிமையானது’ என்ற உண்மை உறுதியான பிறகுதான் மெக்கா நகரத்தில் பகிரங்கமான காப்பிச் சாலைகள் ஏற்பட்டன. மெக்காவிலிருந்து காப்பி தன் பயணத்தைத் தொடங்கியது. முதலில் கெய்ரோ, பிறகு சிரியா, அதன் பின் துருக்கி வந்

தது. இன்றைக்கும் துருக்கியின் தேசிய பானம் காப்பிதான். ஒவ்வொரு சாப்பாட்டுக்குப் பிறகும் சிறிய கோப்பைகளில் உள்ள காப்பியைச் சுவைப்பது துருக்கியர்களின் பழக்கம். வியாபாரப் பேச்சுக்கள், குடும்ப விவகாரங்கள் ஆகியவை காப்பி சாப்பிடும் போது தான் நடக்கும். இவர்கள் அருந்துவது கறுப்புக் காப்பி. பால் கிடையாது. துருக்கியர்கள் இந்தப் பானத்தை, 'காஹ்வே' (Kahveh) என்பார்கள். இது பல மொழிகளில் பலவிதமாக உச்சரிக்கப்பட்டு உருமாறிச் சீனர்களால் 'கைஃபே' (Kaifey) என்றாகியது. ரஷ்யர்கள் 'கோஃபே' (Kophe) என்றழைக்கிறார்கள்.

ஐரோப்பாவில் காப்பி எப்போது எப்படிப் பரவியது? வெனிஸ் வர்த்தகர்கள்







கான்ஸ்டாண்டிநோபிள் நகரத்துக்கு வியாபார நிமித்தமாகப் போகும்போது காப்பிப் பானத்தை ருசித்தார்கள். அவர்கள் மூலம் இது மேற்கத்திய நாடுகளுக்குப் பரவியது.

ஐரோப்பாவில் முதல் காப்பிக் கடை (இங்குள்ள காப்பி கிளப் அல்ல) 1640ல் வெனிஸ் நகரத்தில் ஏற்பட்டது. இங்கிலாந்தில் முதல் காப்பி நிலையம் ஏற்பட்டது 1652ல், கார்ன்ஹில் என்ற இடத்தில். இதற்குள் காப்பி குடிக்கும் பழக்கம் பிரான்ஸ், ஹாலந்து, ஆஸ்திரேலியா, இத்தாலி ஸ்பெயின் என்று வேகமாகப் பரவியது. ஒயினைப் போல் காப்பியையும் அதே அந்தஸ்துடன் ஐரோப்பியர்கள் குடிக்கலானார்கள்.

அராபிய தீபகற்பத்திலுள்ள ஏமனிலிருந்து பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்குள் புகுந்தது காப்பி. இதன் பிறகு காப்பிச் செடியை இலங்கை, ஜாவா, ஹைட்டி, ஜமைக்கா, பிரேஸில் ஆகிய நாடுகளில் பயிரிடலானார்கள். இன்று உலகிலேயே மிக அதிகமான காப்பிக் கொட்டை உற்பத்தி செய்யும் நாடு எது தெரியுமா? பிரேஸில்தான்.

உலகத்தின் காப்பித் தேவையில் மூன்றில் இரண்டு பங்கை பிரேஸில் நாடு அளிக்கிறது. இந்த நாட்டில் ஸா பாலோ (Sao Paulo) என்ற பகுதியில் பல மைல்கள் விஸ்தீரணத்துக்குக் காப்பித் தோட்டங்கள் பரவிக் கிடக்கின்றன. காப்பிச் செடிகளின் உயரம் பதினைந்து அடி. இலைகள் அடர்த்தியாக இருக்கும். இலைகளின் மேல் பக்கம் கரும் பச்சையாகவும் அடியில் வெளிர்ப் பச்சையாகவும் இருக்கும். இலைக் கணுக்களில் நறுமணமுள்ள வெண்மையாக நட்சத்திர வடிவில் பூக்கள் பூக்கின்றன. பூக்கள் செடியில் இருக்கும்போதே அதன் கீழே காப்பிக் காய்கள் கொத்தாகத் தோன்றுகின்றன. ஒவ்வொரு காயினுள்ளும் பச்சையான விதைகள் இரண்டு இருக்கும். சதைப் பற்றுடைய மேல் தோல் முற்றிப் பழுத்த நிலையில் சிவப்பாக மாறும். பறிப்பதற்கு ஏற்ற தருணம் இதுதான். கருஞ்சிவப்பான இலைகள் அடர்ந்த காப்பிச் செடிகள் வரிசை வரிசையாகப் பயிர் செய்யப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். பிரேஸில் நாட்டில் மட்டும் 2000 மிலியன் காப்பிச் செடிகள் இருக்கின்றன.

காப்பியை எப்படிப் பயிரிடுகிறார்கள்? தேர்ந்தெடுக்கப்பட்ட காப்பி விதைகளைப் பண்படுத்தப்பட்ட தனிப் பண்ணைகளில் நாற்றங்கால் அமைத்து விதைக்கிறார்கள். வயதான காப்பி மரங்களை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் நடுவதற்கு இந்த இளங் கன்றுகளே பயன்படுகின்றன. இப்படிக் கன்றுகளைத் தயாரிக்க 'அராபிகா' என்ற

எண்களே எந்தன் கண்களே! விடை :

(1) 20, 3, 18/ 9, 15, 21/ 12, 27, 6. (2) A-15, B-11, C-7, D-3. (3) 8, 7, 9/ 9, 8, 7/ 7, 9, 8. (4) A-2, 7, 5. B-4, 9, 3. C-8, 1, 6. (5) 10, 3, 8/ 5, 7, 9/ 6, 11, 4. (6), அது சரி, எல்லாவற்றுக்கும் விடை சொல்லிவிட்டால் எப்படி? இதற்கு நீங்கள்தான் விடை காண வேண்டும். நான் சொல்லப் போவதில்லை! (7) A-7, B-3, C-10, D-8 - E-4, F-5, G-9, H-6.

படங்களில் பழமொழிகள் - விடை :

(1) மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான். (2) அடியாத மாடு படியாது. (3) ஆலும் வேலும் பல்லுக்குறுதி. (4) ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால். (5) கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. (6) ஆனைக்கும் அடி சறுக்கும். (7) பாக்கு வெட்டியிடைப் பாக்குபோல். (8) தாமரை இலைத் தண்ணீர்.

வகைக் காப்பிகளையே தேர்ந்தெடுக்கின்றனர். கன்றுகள் பதினெட்டு அங்குல உயரம் வளர்ந்ததும் இவைகளைப் பிடுங்கிக் காப்பித் தோட்டத்தில் முறைப்படி நடுகிறார்கள். இந்த நிலையில் இதன் வயது பதினெட்டு மாதங்களாக இருக்கும். இப்படி இடம் மாற்றி நட்ட பிறகு இரண்டு வருஷங்களில் காப்பிச் செடி பூக்க ஆரம்பிக்கின்றன. ஏழு, அல்லது எட்டு வயதுச் செடிகள் சரியான பருவமடைந்து நிறையக் காய்க்க ஆரம்பிக்கும். இதன் பிறகு பதினைந்திலிருந்து இருபது வருஷங்கள் வரையில் காப்பிச் செடி நல்ல விளைச்சலைத் தொடர்ந்து கொடுக்கும். நாற்பது வயதுக்கு மேல் காப்பிச் செடிக்கு மலட்டுத்தன்மை ஏற்பட்டுவிடுகிறது. உடனே இதை அகற்றி அதன் இடத்தில் புதுக் கன்றுகளை நடுகிறார்கள்.

ஒரு காப்பிச் செடியிலிருந்து எட்டு பவுண்டு காப்பிப் பழங்களை எடுக்கலாம். ஒரு நாளைக்கு ஒருவர் 200 பவுண்டு காப்பிப் பழங்களைச் சேகரிக்க முடியும். நூறு பவுண்டு பழங்களிலிருந்து 25 பவுண்டு காப்பிக் கொட்டை கிடைக்கும். காப்பிப் பழங்களைப் பறித்த நாலைந்து மணி நேரத்துக்குள் அதில் உள்ள விதைகளை அப்புறப்படுத்திவிட வேண்டும். இல்லாவிட்டால் காப்பியில் ஒருவிதக் கசப்பு உருவாகிவிடும். செடிகளிலிருந்து பழங்களைக் கையால் பறிப்பதும் உண்டு. நன்றாகப் பழுக்க விட்டு மரத்தின் கீழே விரிப்புக்களை விரித்து மரத்தைக் குலுக்கிப் பழங்களைத் தானாக விழச் செய்து சேகரிப்பதும் உண்டு.


காப்பிப் பழங்களை இயற்கை முறையில் வெய்யிலில் உலர்த்தி விதைகளைப் பிரிப்பது ஒரு முறை. யந்திரங்களின் மூலம் தண்ணீரைக் கொண்டு கழுவி விதைகளைப் பிரிப்பது மற்றொரு முறை. இயற்கை முறை சிக்கனமானது.

எம்முறையில் காப்பிக் கொட்டைகளைப் பிரித்தாலும் அதன் மீது மெல்லிய ஒரு தோல் மூடிக்கொண்டிருக்கும். இதை அகற்றத் தோல் உரிக்கும் ஹல்லிங் யந்திரத்துக்குப் போய்த்தான் ஆகவேண்டும். தோல் உரித்தான பிறகு பாலிஷ் செய்து தரம் பிரித்து மூட்டைகளாகக் கட்டி ஏற்றுமதிக்குத் தயாராக்குகிறார்கள்.

காப்பிக் கொட்டைகளில் மிக உயர்ந்த ரகம் எது தெரியுமா? மோகா (Moka) என்ற ஒருவகைதான். இது ஏமன் நாட்டிலிருந்து வருகிறது. இவ்வகையின் செடிகளில்தான் கணுக்களில் காய் பிடிக்கும்போது இரண்டே இரண்டு காய்கள் மட்டுமே செழித்து வளருகின்றன. மற்றவைகளையெல்லாம் இவ்விரண்டும் அழித்துத் தாங்கள் மட்டும் பெரியதாக, ஆரோக்கியமாக, உருண்டையாக வளர்கின்றன. இந்த மோகா இனத்துக் காப்பிக் கொட்டைகளுக்குத்தான் தனி மணம் உண்டு; மவுசும்தான்.

காப்பிக் கொட்டையை வறுத்துப் பொடியாக்குவது ஒரு கலை. பச்சை நிறக் கொட்டையை கருஞ்சிவப்பு நிறத்துக்கு வறுக்கும்போது காப்பியிலுள்ள நீரெல்லாம் போய்விடுகிறது. அதில் உள்ள 'காபின்' என்ற விஷச் சத்தும் வெகுவாகக் குறைந்துவிடுகிறது.

காப்பி தயாரிப்பதில் இப்பொழுது எத்தனையோ நவீன முறைகள் வந்துவிட்டன. 'இன்ஸ்டண்ட்' காப்பி இருந்தாலும் 'பில்டரில் வடிகட்டிய டிகாக்ஷன் கலந்த காப்பியின் ருசியே தனிதான்' என்று சொல்லும் ரசிகர்கள் உண்டு. எப்படியானாலும் காப்பி குடிப்பது கெட்ட பழக்கம் என்று ஒதுங்கிப் போகிறவர்களும் இல்லாமல் இல்லை.




பையனின் தந்தை:—'ஹோம் சிக்' என்று சொல்லி ஹாஸ் டலில் இருந்து அனுப்பி விட்டார்கள்...
வந்தவர்:—இங்கே வந்த பிறகு எப்படி இருக்கிறான்?
பையனின் தந்தை:—ஹாஸ் டல்-'சிக்'காக இருக்கிறான்...!
கே. சுந்தி
"இது என்ன படம்?"
"ஆட்டினுடைய படம் சார்!"
"இதென்ன? ஆட்டுக்கு வாயே போடவில்லையே!"
"நீங்கள்தானே சார், ஆடு வாயில்லாப் பிராணி என் றீர்கள்!"
நத்தராஜா
வீட்டுக்காரர்:—பயம் என் றால் இன்னது என்றே தெரி யாமல் பையனை வளர்க் கணும். அதனாலே 'பூனை' 'ரெண்டும் என்ன' என்று கூடச் சொல்லிக் கொடுப்பது இல்லை.
வந்தவர்:—ஏன்?
வீட்டுக்காரர்:—பூனை என்றால் அந்த......'அந்த' என்று ரெண்டும் பயப்படு தானே போறான்...!
கே. சுந்தி
ராமு:—
மாமா! நான் ஜன்னலுக்கருகில் உட்கார்ந்து கொள்கிறேன்.
மாமா:—கண்ணில் எஞ்சின் கரித்தூள் விழும்:
ராமு:—மாமா! இந்த வண் டியை இழுத்துச் செல்வது டீசல் எஞ்சின்.. டீசல் எஞ்சினிலிருந்து கரித் தூள் எப்படி வரும்?
திருச்சி ராஜமோகன்
கழுதை:—
(குட்டியைப் பார்த்து) ஏண்டா, பரீட்சை பேப்பர் எல்லாம் நன்றாத் தின்னியா?
கழுதைக் குட்டி:
...? ..?...?...
ஸ்ரீதரன்
"கல்லூரி நாடகத்தில் உனக்கு என்ன வேஷம்?"
"அப்பா வேஷம்."
"டயலாக் இருக்கிற வேஷமாகக் கேட்பதுதானே?"
கே. வி. ராவ்
(வீட்டில் சண்டைக்குப் பின்னர்)
ரங்கு:—கடைக்காரரே! ஒரு பலூன் கொடுங்கள்.
ரங்கு:—கடைக்காரரே! ஒரு ஊசி கொடுங்கள்!
கே. வி. முரளி
ராமு இருட்டில் டார்ச்சை அடித்தான். அதன் ஒளி கற்றையாக மேலே தோன்றி யது. கோபுவிடம் சொன்னான் தமாஷாக: "உன்னால் இந்த ஒளிக்கற்றையின் மேல் ஏற முடியுமா?"
கோபு சொன்னான்:—"நான் பாதி ஏறும்போது நீ 'டார்ச்' விளக்கை அணைத்துவிட்டால் நான் கீழே விழுந்து விடு வேனே!"
—கேசவன்

எழுத உதவுவது மை
நமக்கு இருப்பது கை
கழுத்தில் கட்டுவது டை
காய்கறி வாங்குவது ...?

கிழமையில் சிறந்தது வெள்ளி
பாடம் படிப்பது பள்ளி
காட்டில் கிடப்பது சுள்ளி
செடியில் ஒருவகை ...?

ஊர்களில் ஒன்று
கரைகளை இணைப்பது
யுகங்களை இணைப்பது
நிறங்களில் ஒன்று

விளையாட உதவுவது சோழி
பட்சிகளில் ஒருவகை கோழி
சிநேகிதிக்கு மறுபெயர் தோழி
கட்டிக்கு ஒரு பெயர் ...?

உடம்பை நடுங்கவைப்பது பனி
நாடுகளில் ஒன்று இனி
நமக்குப் பிடித்தது நீனி
சர்க்கரைக்கு மறுபெயர் ...?

அணிவது தொப்பி
வைக்குமிடம் டப்பி
எல்லையில் தப்பி
இருப்பிடம் ...?

கரம் மிக்ச்சர்......!

மிகப் பெரிய காரியாலயம்

அண்மையில் நடந்த இந்திய - பாகிஸ்தான் போரின்போது செய்தித் தாள்களில் மிகவும் அடிபட்ட பெயர் 'பெண்டகான் பேப்பர்ஸ்' (Pentagon Papers) என்பதாகும். இந்த ''பெண்டகான் அலுவலக''க் கட்டிடம் வாஷிங்டனில் உள்ளது. இது அமெரிக்காவின் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த ஓர் அங்கம்.

'பெண்டகான் அலுவலகம்' தான் உலகிலேயே மிகவும் அதிகப் பரப்பளவை உடைய காரியாலயம். ஐந்து மாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் 1943-ம் ஆண்டு சுமார் 83 மில்லியன் டாலர் செலவில் கட்டி முடிக்கப்பட்டது. இக் கட்டிடத்தைப் பற்றிய சில புள்ளி விவரங்கள்: பரப்பளவு - 3,30,000 மில்லியன் ச. மீ., வந்து தங்கும் கார்களின் மொத்த எண்ணிக்கை - 10,000; மொத்த கடிகாரங்கள்-3,000; நடைபாதையின் நீளம் 28 கி. மீ., தினசரி வருபவர்களின் எண்ணிக்கை - 30,000.

- ந. சுப்பிரமணியன்


தண்ணீரிலே தாமரைப்பூ

சூரியன் உதிக்கும்போது தாமரைப் பூ மலர்கிறது. சூரியன் மறையும்போது தாமரைப் பூ குவிந்து விடுகிறது. என்ன காரணம்? நான் சொல்லட்டுமா?

வண்டு ஒன்று வசிக்க இடமில்லாமல் சுற்றிச் சுற்றி வந்ததாம். பகலில் இரை தேடிச் சுற்றிக் கொண்டே இருப்பதால் பகல் வேளையில் இருப்பதற்கு இடம் வேண்டாம். ஆனால் இரவில் தூங்குவதற்கு இடம் வேண்டுமே! யோசித்துப் பார்த்தது வண்டு. அதற்கு வழி ஒன்றும் தெரியவில்லை. வேதனையோடு வரும் வண்டைப் பார்த்தது சூரியன். ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று வண்டினிடம் கேட்டது. வண்டு ''எனக்கு இரவு படுத்துத் தூங்க இடம் வேண்டும்'' என்றது. அதற்குச் சூரியன் ''தாமரைப் பூவில் தங்கிக்கொள்'' என்றது. ''தண்ணீரில் உள்ள தாமரையில் தங்கினால் இரவு பூ விரிந்திருக்கும்போது குளிருமே, என்ன செய்வேன்?'' என்றது வண்டு.

''இரவில் குளிராமல் இருக்கத் தாமரையைப் போர்த்திவிடச் சொல்லுகிறேன். காலையில் நான் வந்ததும் தாமரையும் விரியும். நீயும் வெளியில் பறந்து போகலாம்'' என்றது சூரியன். அதுமுதல் வண்டுக்கு மலர்ப் படுக்கை வசதி கிடைத்தது. எப்படி என் கற்பனை? ஜோராக இருக்கிறதா?

— கே. வி. கமலா



அன்னைக்கு மறுபெயர் தாய்
குழவிக்கு ஒரு பெயர் சேய்
சாத்தானனது பேய்
விலங்குகளில் ஒன்று ...?

மூதியவர்களின் துணை
பெண் யானைக்குப் பெயர்
விழாவில் வெடிப்பது
வாசனைக்கு மறுபெயர்

ங்களை நறுக்குவது கத்தி
ங்களில் ஒன்று அத்தி
ரியைக் கொடுப்பது வத்தி
டிப்பால் மின்னுவது ...?

வேதத்துக்கு மறுபெயர் மறை
பொறுமைக்கு மறுபெயர் பொறை
கைதிகளை அடைப்பது சிறை
வீடுகளில் இருப்பது ...?

வயல்களில் விளைவது நெல்
வாயினிற் பிறப்பது சொல்
இன்பண்டங்களை அரைப்பது பல்
தெருக்களில் கிடப்பது ...?

கடவுளின் வாகனம் தேர்
மக்கள் வசிப்பது ஊர்
பெண்ணுக்குத் தருவது சீர்
விரைவாக ஓடுவது ...?

நவினி

வளர்பிறையா தேய்பிறையா?



பிறைச் சந்திரனைப் பார். அது வளர்பிறை நிலவா? தேய்பிறை நிலவா? உன்னால் அறிய இயலுமா? கிண்ணத்தைக் கவிழ்த்தது போல் விளிம்புகள் கீழ்நோக்கி இருந்தால் அது வளர்பிறைச் 'சந்திரன். கிண்ணத்தை நிற்க வைத்தாற் போல் விளிம்புகள் மேல்நோக்கி இருந்தால் அது தேய்பிறைச் சந்திரன். - **ஆ. இராமகிருஷ்ணன்**



பறவைகளிலே ஒரு புத்திசாலி!

இருக்கின்ற எல்லாப் பறவைகளிலுமே காக்கை தான் மகா புத்திசாலி என்கிறேன் நான். ஏன் தெரியுமா? பறவைகளில் காக்கைக்கு மட்டுமே தன் பெயரைச் சொல்லத் தெரிகிறது. மற்ற எந்தப் பறவையுமே தன் பெயரைச் சொல்லிக் கத்துவதில்லையே, காக்கை, 'காக்கா' என்பதைப் போல!

- வ. பானுமதி



சமீபத்தில் மறைந்த நேபாள மன்னர் மகேந்திராவின் சிராத்தத்தின்போது ஓர் அந்தணருக்கு அநேக மரியாதைகள் செய்யப்பட்டன. ஏழையாயிருந்த அவ்வந்தணர் ஒரே நாளில் பெரிய செல்வந்தராகி விட்டார். எப்படி?

மன்னர் மகேந்திரா செய்த பாவச் செயல்கள் அனைத்தையும் தாமே ஏற்றுக் கொள்வதாக ஒப்புக்கொண்டு - நேபாள இந்து மத சம்பிரதாயங்களின்படி - அதற்கு ஈடாக மன்னர் வம்சத்தினர் அளித்த வெகுமதிகளைப் பெற்றுக் கொண்டார். இதன் மூலம் அந்த அந்தணர் தம்மைப் பிறரால் தீண்டத்தகாதவர் என்று நிரூபித்துக் கொண்டார்.

இதற்குப் பரிகாரமாக இவர் பெற்றுக் கொண்டவை முறையே - கணிசமான பணம், ஒரு யானை, ஒரு குதிரை, புத்தம் புதிய கார், மறைந்த மன்னரின் மணி முடியின் உருவம் பொறித்த தங்க, வெள்ளி சாமரங்கள், பல வருடங்களுக்குக் காணும் பொருட்டுத் தேவையான உணவுப் பொருட்கள்.

இவற்றை வைத்துக்கொண்டு இவர் ஒரு வருட காலம் தள்ள வேண்டும். இதன் பொருட்டு இவர் நாடு கடத்தப்பட்டார். ஒரு வருடம் கழித்துத்தான் இவர் தம் தாய்நாட்டிற்கு வரவும், தம் சுற்றத்தாரோடு இருக்கவும் முடியும். பாவம் தொலைய ஆண்டொன்று அவர் தொலைவில் (தம் நாட்டைவிட்டு) இருக்க வேண்டும்!

- ந. சுப்பிரமணியன்


விடைகள்:

1. தூணி.
2. ஆடி.
3. நெடி.
4. நாய்.
5. சிப்பி.
6. சினி.
7. தாழி.
8. பை.
9. கன்னி.
10. நீலம்.
11. புத்தி.
12. அறை
13. கல்.
14. கார்.

ரசியின் தோழி சேடி
ணிக்கு மறுபெயர் கோடி
றுகாய் வைப்பது ஜாடி
ாதங்களில் ஒன்று ...?

கலைமகளின் பெயர் வாணி
அளவையின் பெயர் காணி
சுவரில் அடிப்பது ஆணி
அம்புகளின் இருப்பிடம் ...?

எங்கே தெரிகிறதா பார்ப்போம்?



உலகத்திலேயே பச்சைத் தேயிலையை அரைத்து மாவாக (Tea Powder) அதன் பாணியை மாற்றி அமைக்கும் திமர் தேயிலைத் தொழிற்சாலை இலங்கையில் அக்கரபத்தனை என்ற இடத்தில் இருக்கிறது. சாதாரணத் தேயிலையைத் தூள் என்கிறோம். இதைப் பௌடர் என்று குறிப்பிடுகிறார்கள். இந்தத் தேயிலைப் பௌடரைக் கொதிக்கும் நீரில் கலந்து அப்படியே அருந்துவதாகச் சொல்லப்படுகின்றது. இத் தேயிலை மாவை உள்ளூரில் விற்பனை செய்வதில்லை. வெளிநாட்டு ஏற்றுமதி மாத்திரம்தான். அத்துடன் தொழிற்சாலை ஊழியர்கள் தொழிற்சாலையில் இருந்து வேலை முடிந்து வரும்போது அவர்களைச் சோதனை செய்தே அனுப்பப்படுகிறது. ஆதலால் அப்பௌடரின் தன்மை இலங்கையிலேயே யாருக்கும் தெரியாது எனலாம்.

— கே. காயாம்பு

ஊமை மலர்

தென்னகத்துப் பெண்
மணிகள் கனகாம்பரத்தை
விரும்பிச் சூடிக் கொள்வது
போல் மகாராஷ்டிரத்து மகளிர்
களும் இந்தப் பூவை விரும்பித்
தலையில் வேணியாக வைத்துக்
கொள்ளுகிறார்கள். கனகாம்பரத்தை
இவர்கள் 'அபோலி' என்கிறார்கள்.
'அபோலி' என்றால் 'பேசாதது'
என்று பொருள். மணக்காத
இம்மலருக்கு 'அபோலி'
என்கிற பெயர் எத்
தனை பொருத்தம்?

— மயிலன்.

இவர் யார்?

எனக்கு உடன் பிறந்த சகோதரர்களோ சகோதரிகளோ ஒருவரும் இல்லை. ஆனால் என்னுடன் வருகிறாரே, இவருடைய தகப்பனார், என் தந்தை யாரின் மகன். அப்படியானால் என்னுடன் வருகின்ற இவர் யார்?

— வ. பானுமதி













படங்களிலே பதுங்கி இருக்கும் பழமொழிகள்?



இந்தப் பக்கத்தில் உள்ள புகைப்படங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு பழமொழி ஒளிந்து கொண்டிருக்கிறது. அதை உங்களால் கண்டுபிடிக்க முடிகிறதா பாருங்கள், உங்கள் ஊகத்தை 20ம் பக்கத்திலுள்ள பழமொழிகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். புகைப்படங்கள்: என். ராமகிருஷ்ண








நேர்மையின் பரிசு

மாயூரன்



சேகரும் சங்கரும் நண்பர்கள். அடுத்தடுத்த வீட்டில் வசிப்பவர்கள். பக்கத்து ஊரில் இருக்கும் பள்ளிக்கூடத்தில் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். அவர்களுடைய ஊரில் பள்ளிக்கூடம் இல்லையாதலால் பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டியிருந்தது. தினமும் ரயிலில் தான் போக வேண்டும். பெரும் பாலும் இரண்டு பேரும் சேர்ந்தே போவார்கள். ஒன்றாகவே திரும்பி வருவார்கள்.

ஒவ்வொரு வருஷமும் கட்டுரை இலக்கியப் போட்டியில் பரிசைத் தட்டிக் கொண்டுபோவான் சங்கர். ஆனால் அவனோ ஏழை. அவன் படிக்கத் தேவையான புத்தகங்களைக் கூடச் சேகரிடமிருந்துதான் இரவலாகப் பெறுவான்.

அன்று பள்ளிக்கூடத்தில் இடைவேளையின் போது 'சேகரைத் தனியாக அழைத்தான் சங்கர்.

''சேகர்....! இந்த வருஷம் கட்டுரைப் போட்டியில் உனக்குத்தான் பரிசு என்று நினைக்கிறேன். என் மனப்பூர்வமான பாராட்டுக்கள்'' என்றான்.

''இதென்ன வேடிக்கை?'' என்று கேட்டான் சேகர்.

''இப்போது வேடிக்கை போல் தான் இருக்கும். மாலையில் கூட்டத்தில் பரிசு வாங்கும்போது உண்மையாகிவிடும்'' என்றான் சங்கர் சிரித்தவாறே.

''என்னால் நம்ப முடியவில்லை. நீ எப்படி இவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?''

ஆனால் சங்கர் காரணம் கூறவில்லை. பாராட்டிவிட்டு ஓடி விட்டான்.

இதற்குள் பிற்பகல் வகுப்புக்கள் தொடங்குவதற்கான மணி, ஒலித்தது. இருவரும் வகுப்பினுள் நுழைந்தனர். அவர்களைத் தொடர்ந்து தமிழாசிரியரும் வகுப்பினுள் நுழைந்தார். சேகரை அழைத்தார். ''இன்று மாலை இலக்கியச் சங்கக் கூட்டத்துக்கு நம் பள்ளியின் முன்னாள் மாணவரும் இப்போது உயர்ந்த பதவியில் இருக்கும் ஒரு போலீஸ் அதிகாரி தலைமை வகிக்கப் போகிறார். அவரை வரவேற்றுத் தலைமை ஆசிரியர் பேசுவார். ஆனால் நன்றி சொல்லும் பொறுப்பை மாணவர்களில் ஒருவர்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தலைமை ஆசிரியர் கூறியுள்ளார். அந்தப் பொறுப்பை, சேகர், நான் உன்னிடம் ஒப்படைக்கிறேன். கூட்டத்தில் நடுவில் எங்கேயாவது உட்கார்ந்து கொண்டு தேட வைத்து விடாமல் மேடைப் பக்கமாகவே இருந்து நிகழ்ச்சிகளைக் கவனித்து வா. உன் பெயரைப் படிக்கும்போது மேடைக்கு வா'' என்றார். சேகர் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்துவிட்டுத் தன் இடத்துக்குச் சென்றான். வழியில் சங்கரின் கண்கள் அவனைச் சந்தித்தன. ''நான் சொன்னது உண்மைதானே?'' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை. தமிழாசிரியர் தொடர்ந்து, ''சங்கர் சேகருக்குத் துணையாக நீயும் அவன் பக்கத்தில் இரு'' என்றார்.

மாலையில் மாணவர்கள் அனைவரும் மைதானத்தில் கூடினர். மேடையில் தலைமை ஆசிரியரும் பெரிய போலீஸ் அதிகாரியும் உட்கார்ந்திருந்தார்கள். சுற்றிலும் ஆசிரியர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். மேடைக்கு எதிரே மாணவர்கள் அணி அணியாக அமர்ந்திருந்தார்கள். சேகரும் சங்கரும் மேடையை ஒட்டினாற்போல் முன் வரிசையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

இறை வணக்கத்துக்குப் பிறகு தலைமை ஆசிரியர் பேசியபோது தலைமை தாங்க வந்துள்ள போலீஸ் அதிகாரி இந்தப் பள்ளியிலேயே படித்தவர் என்பதைக் குறிப்பிட்டு, ''இந்தக் கூட்டத்துக்கு அவரை அழைக்கச் சென்றபோது அவரே நம் பள்ளிக்கு வருவதாக இருந்தார். அதற்கான காரணங்களை அவரே தம் உரையில் விளக்குவார். உங்கள் சார்பில் அவரை வரவேற்று, நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றுமாறு அழைக்கிறேன்'' என்று கூறி முடித்தார். மாணவர்கள் தங்கள் மகிழ்ச்சியைக் கையொலி மூலம் காட்டினர். போலீஸ் அதிகாரி பேச எழுந்ததும் கரகோஷம் ஓய்ந்தது.

போலீஸ் அதிகாரி தம் உரையைத் தொடங்கிய விதமே மாணவர்களைக் கவர்ந்து விட்டது. அவர்களுடைய கரகோஷத்துக்கிடையே அவர் தொடர்ந்தார்: ''நான் இந்தப் பள்ளிக்கூடத்து மாணவன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். சில நாட்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி ஒன்றை நான் இங்கே கூற விரும்புகிறேன். கடந்த திங்கட்கிழமை யன்று நான் இந்த ஊர் வழியாக ரயிலில் சென்று கொண்டிருந்தேன். அப்போது நான் போலீஸ் உடையில் இல்லை. மூன்றாம் வகுப்பில் தான் பயணம் செய்து கொண்டிருந்தேன். இந்த ஊரில் ரயில் வண்டி நின்றதும் சில மாணவர்கள் நான் ஏறியிருந்த பெட்டியினுள் ஏறினார்கள். என் எதிரே காலியாக இருந்த இடத்தில் ஒரு மாணவன் உட்கார்ந்து கொண்டான். ஏதோ புத்தகத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். அட்டையில் அவன் பெயர், வகுப்பு விவரங்கள் இருந்தன. நான் படித்த பள்ளியில் படிக்கும் மாணவன் என்று அறிந்ததும் நான் அவனோடு சற்று விளையாட விரும்பினேன். அடுத்த ஸ்டேஷன் வரும்போது என் மணிபர்ஸை வேண்டுமென்றே அவன் அறியா வண்ணம் ஆனால் அவன் கண்ணில் படும்படி விட்டு விட்டு இறங்கினேன். பர்ஸில் நிறையப் பணம் இருந்தது. என் முகவரியும் இருந்தது. அந்தப் பர்ஸை



எடுத்து அந்த மாணவன் என்ன செய்கிறன் என்று அறிந்து கொள்வதில் எனக்கு ஓர் ஆவல். நான் எதிர்பார்த்த படியே — இல்லே — நான் விரும்பிய படியே அந்தப் பர்ஸை அந்த மாணவன் அடுத்த ஸ்டேஷனில் ரயில் நிலைய அதிகாரியிடம் கொடுத்து விட்டான். ரயில் நிலைய அதிகாரியிடம் நான் முன்னதாகச் சொல்லி யிருந்ததால் பர்ஸ் என்னிடம் வந்து சேர்ந்தது. பணம் ஏதும் குறையவில்லே. இந்தப் பள்ளிக் கூடத்து மாணவர்கள் நேர்மை மிக்கவர்கள், பிறர் பொருளுக்கு ஆசைப் படாதவர்கள் என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு. உண்மை பேசுவதும் நேர்மையாய் நடப்பதும் உயர்ந்த குணங்கள். அத்தகைய நல்ல குணம் இளமையிலேயே உங்களிடம் அமைந்துவிட வேண்டும். நேர்மையாக நடந்து கொண்ட அந்த மாணவனுக்கு நான் நூறு ரூபாய் அன்பளிப்பாக வழங்க விருக்கிறேன். அந்தப் புத்தகத்தில் எழுதியிருந்த மாணவனின் பெயரைப் படிக்கிறேன். இங்கு வந்து உங்கள் முன்னிலேயில் என் அன்பளிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்த மாணவனேக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று கூறி முடித்த போலீஸ் அதிகாரி தம் டைரியைப் பிரித்து, அதில் எழுதியிருந்த பெயரை உரக்கப் படித்தார்:

''ஆர். சேகர், ஐந்தாம் படிவம், அ-பிரிவு.'' மாணவர்கள் இந்த முறை பலமாகக் கைதட்டினுர்கள். 'வெல்டன் சேகர்' என்று கூட்டத்தில் ஒரு குரல் கேட்டது. சேகர் திக்பிரமை பிடித்து நின்ருன். தமிழாசிரியர் அவனேப் பிடித்து உலுக்கி, ''உம்... மேடைக்குப் போ'' என்ருர். சேகர் தயங்கியவாறே மேடைக்கு வந்தான். போலீஸ் அதிகாரியின் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டு இருந்தது. அவர் அதைச் சேகரிடம் நீட்டினுர். ஆனல் சேகர் அதைப் பெற்றுக் கொள்ளவில்லே. ''என்னே மன்னித்துக்கொள்ளுங்கள். இந்தப் பரிசுக்குரியவன் நான் இல்லே'' என்ருன் சேகர். ''நீ சேகர் இல்லேயா?'' என்ருர் போலீஸ் அதிகாரி. ''சேகர் என்பது நான்தான். ஆனல் அன்று ரயிலில் உங்களோடு பயணம் செய்தது நான் இல்லே'' என்ருன் சேகர். ''விவரமாகச் சொல். இந்தக் கூட்டத்தில் அதை எல்லோரும் கேட்கட்டும்'' என்ருர் போலீஸ் அதிகாரி. சேகர் ஒலி பெருக்கி முன் சென்ருன். ''நண்பர்களே, நம் தலேவர் அவர்கள் குறிப்பிட்ட பெருமைக்குரியவன் நான் இல்லே. கடந்த திங்கட்கிழமையன்று நான் பள்ளிக்கூடத்துக்கு வரவேயில்லே. தலேவர் அவர்களுடன் பயணம் செய்து நேர்மையாக நடந்து கொண்டு அவர் பாராட்டுக்கு உரியவனுனவன் என் அருமை நண்பனும் உங்கள் அனேவருடைய அன்புக்கும் பாத்திரமான எஸ். சங்கர்தான். என்னுடைய புத்தகத்தை நான் சங்கருக்குப் படிக்கக் கொடுத்திருந்தேன். அட்டையில் என் பெயர் தான் எழுதியிருந்தது. அன்று நடந்த நிகழ்ச்சியையும் சங்கர் என்னிடம் கூறியுள்ளான். ஆகவே நேர்மையின் பரிசைச் சங்கருக்கு வழங்கும்படி தலேவர் அவர்களேக் கேட்டுக் கொள்கிறேன்'' என்ருன் சேகர்.

போலீஸ் அதிகாரி மீண்டும் எழுந்தார். ''என்னுடைய இரண்டாவது சோதனேயும் வெற்றி பெற்று விட்டது. அந்த மாணவன் பர்ஸைக் கொண்டு வந்து கொடுத்தால் அவனிடம் ஒரு 'ஸ்டேட்மெண்ட்' எழுதி வாங்கிக் கொள்ளுமாறு ரயில் நிலைய அதிகாரியிடம் கூறியிருந்தேன். அதுபோலவே பர்ஸை ரயிலில் பார்த்த விவரத்தையும், அதில் இருந்த தொகையையும் எழுதி, தன் பெயர், முகவரி முதலிய யாவும் எழுதிக் கொடுத்திருந்தான். சங்கரைச சோதித்தது போலவே சேகரையும் சோதிக்க எண்ணி நூறு ரூபாயை அவனுக்குக் கொடுக்க முன்வந்தேன். ஆனல் இந்த இரண்டு இளம் உள்ளங்களிலும் உண்மை பேசுதல், நேர்மையாக நடத்தல் என்ற குணங்கள் ஊறிக் கிடக்கின்றன. உண்மையைச் சொல்லி, இந்தப் பணம் சங்கரையே சேரும் என்று சேகர் நேர்மையாக எடுத்துக் கூறிவிட்டான். பிறர் பொருளுக்கு ஆசைப்படாமல், உண்மைக்கும் நேர்மைக்கும் உதாரணமாக விளங்கும் சங்கர் — சேகர் ஒவ்வொருவருக்கும் நான் நூறு ரூபாய் அன்பளிப்பாக வழங்குகிறேன்'' என்று கூறிப் போலீஸ் அதிகாரி இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களே எடுத்துக் கொண்டு சங்கரையும் சேகரையும் அவற்றை வாங்கிக் கொள்ள வருமாறு அழைத்தார்.


அதே சமயத்தில் தமிழாசிரியர் ஒரு சிறு தாளேக் கொண்டு வந்து தலேமை ஆசிரியரிடம் நீட்டினுர். அதைப் படித்துப் பார்த்த தலேமை ஆசிரியர் எழுந்து, ''கட்டுரைப் போட்டியின் முதல் பரிசையும் மாணவர்கள் சேகரும் சங்கரும் பகிர்ந்து கொள்கிறுர்கள்'' என்று அறிவித்தார். அப்போது கூட்டத்தில் எழுந்த கைதட்டல் ஒலி எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்களே கற்பனே செய்து பாருங்கள்.



பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
அம்மா, நீ செய்த மைசூர்ப்பாகு ரொம்ப ஜோர்! எனக்கு இன்னும் ரெண்டு கட்டி கொடும்மா?
ம்...ஹூம்! நீ நிறையத் தின்னுட்டே. உடம்புக்கு ஆகாது. நாளைக்குக் காலையில் தான் இனிமேல்.
அன்று நள்ளிரவில்
எல்லாரும் தூங்கிருப்பாங்க. நான் மெள்ளச் சமையலறைக்குப் போய்... மைசூர்ப்பாகை ஒரு வெட்டு வெட்டப் போறேன்.
ஆ! என்ன ருசி! என்ன ஸ்வீட்! விட்டுப் போகவே மனசில்லே.
ஐயையோ! அதென்ன சத்தம்? விளக்கு வெளிச்சம் வேறே. அம்மா எழுந்துட்டாளோ?
இருக்கட்டும். இப்ப என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும். தூக்கத்தில் நடந்து போற மாதிரி நடிக்கிறேன்.
பயல் தூக்கத்தில் எழுந்து நடந்து போறானா? இல்லே... அது என்ன கன்னத்தில்? மைசூர்ப்பாகுத் தான்...
கொ...ர்...ர்...
பயல் என்னை ஏமாத்த நடிக்கிறான். இந்தத் தடவை விட்டுடுவோம். இன்னொரு தடவை இப்படிச் செய்தால்?
மறுநாள் மாலை
பாலு, உன் பெரிய மாமா வந்திருக்கார். இங்கே சில நாள் தங்கப் போறார்.
உனக்காகப் பாம்பே ஹல்வாவும் ஸ்வீட்டுகளும் வாங்கி வந்தேன், இந்தா பாலு.
ஆ, ஐயா! பாம்பே ஸ்வீட்ஸ்! எனக்கு ரொம்பப் புடிக்கும்.




மாமா வாங்கி வந்ததை ஒரே நாளில் தீங்க ணுமா? போதும், போய்ப் படு, நாழியாகிறது.
இரவு எல்லாரும் தூங்கிய பின்.
இன்றிரவும் பயலுக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி வரும். என்று பாம்பே ஸ்வீட்ஸ் பாக்கி இருக்கு. வரட்டும் பயல். நான் சமையலறையில் ஒளிந்து கொள்ளுகிறேன்.
அடடே! ரொம்ப லேட்டாயிட்டுதே. பாக்கி ஸ்வீட்ஸை காலி பண்ணியாகணும்.
ஐயோ! அதென்ன சமையலறையில் சத்தம்? யாரோ திருடன் போலே... மாமாவை எழுப்பி அனுப்பறேன். அவர் தான் போலீஸ் இன்ஸ்பெக்டராச்சே!
பாலு... நீ இங்கேயே இரு. அந்தத் திருட்டுப் பயலை என்ன பண்ணறேன் பாரு...
அது... ஐயோ... அப்பாவோட குரல்னு, திருடன் இல்லே... இருட்டிலே ஒத்தரை ஒத்தர் பார்த்துக்காமே... சேச்சேச்சே... நான் சீக்கிரம் என் படுக்கைக்குப் போயிடறதுதான் நல்லது...!
படார்..! மடார்...! அம்மா
தடால்
ஐயோ..! ஏய்...! அப்பப்பா..
பா...லு...!


வாலாட்டும் நாய்க்குட்டி









1




2



3





நாய் நன்றியுடைய பிராணி என்று உங்களுக்குத் தெரியுமே. உங்களைக் கண்டால் வாலையும் தலையையும் ஆட்டும் இந்த நாய்க்குட்டி. படத்திலுள்ள நாயின் உடல், தலை, வால் ஆகியவைகளை ஒரு கெட்டி அட்டையில் 'ட்ரேஸ்' செய்துகொள்ளுங்கள். தலையிலும் வாலிலும் புள்ளி வைத்துள்ள பகுதியில் துவாரம் செய்து கொள்ளுங்கள். அதே மாதிரி உடல் பகுதியிலும் ஓட்டைட் செய்து பித்தளைப் பேப்பர் கிளிப்பினால் படம் 1ல் காட்டியபடி தலையையும் வாலையும் உடலோடு இணைத்து அதன் அலகுகளை விரித்து விடுங்கள். தலையும் வாலும் இலகுவாக இயங்கும்படி செய்துகொள்ளுங்கள். ஓர் அங்குல கனமும் ஒன்பது அங்குல நீளமுமுள்ள ஒரு கட்டையில் படம் இரண்டில் காட்டியபடி நாயின் கால்களில் சிறு ஆணி கொண்டு அடித்துப் பொருத்துங்கள்.

இனி நாயின் தலை வால் பகுதியின் கீழ் உள்ள துவாரத்தில் ஒரு நூலை நுழைத்துப் படம் 3ல் காட்டியுள்ளபடி இணைத்து இரு முனைகளையும் கட்டையின் கீழாக வரும்படி ஒன்றுசேர்த்து அதில் ஒரு கனமான பொருளை, (கல்லோ, இரும்புக் கட்டையோ) கட்டித் தொங்கவிடுங்கள். இந்தக் கனமான பொருளை ஆட்டிவிட்டால் நாய் தன் தலையையும் வாலையும் ஆட்டி உங்களை வரவேற்கும்.

— கிருஷ்ணவேணி



'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : சதாசிவம்



ன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
புரிந்ததா ராமு. குத்துச் சண்டையில் இது முதல் பாடம்— தற்காப்பு செய்துகொள்ளக் கற்பது.
அடடே, நேரமாகி விட்டது படுக்கப் போ ராமு. பிரஷ்கொண்டு பற்களைத் துலக்கினாயா?
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
வா, நாமிருவரும் போர்ஹான்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
Forhan's
FOR THE GUMS
போர்ஹான்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

REGISTERED NO. M. 9040

"'ஜாக்கிரதையாகக் கையாளவும்' என்று எழுதட்டுமா?"

"அவசியமில்லை. ஸதர்ன் ரோட்வேஸில்தானே அனுப்பப் போகிறோம்?"

பிரதி வருடமும் பல லட்சம் டன் எடையுள்ள பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வேஸ் சுமந்து சென்று சேர்க்கிறது. பார்ஸல்களை அது ஜாக்கிரதையாகக் கையாள்கிறது. ஒவ்வொருவரையும் தனி அக்கறையுடன் கவனித்து சேவை செய்கிறது. இதனாலெல்லாம்தான் அதனிடம் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. பார்ஸல்களை ஏற்றுவது, எடுத்துச் செல்வது, இறக்குவது அனைத்தையும் விசேஷப் பயிற்சி பெற்ற ஊழியர்களே செய்கிறார்கள்.

ஆகவே உங்கள் பார்ஸல்களை ஸதர்ன் ரோட்வே
நல்லபடியாகவும் பத்திரமாகவும் கொண்டுபோய
சேர்ப்பதில் வியப்பில்லை.

வாடிக்கையாளர்களிடை வளர்ந்து வரும் நல்லெ
ண்ணமும் நம்பிக்கையும்தான் தென்னகம்பூரா
யும் தன் பார்ஸல் ஸர்வீஸினால் ஸதர்ன் ரோ
வேஸ் அரவணைக்கத் துணை புரிந்துள்ளது. தங்க
பண்டங்களை அனுப்புவதற்கு மேன் மேலும் அதி
மக்கள் ஸதர்ன் ரோட்வேஸைப் பயன்படுத்தி
கொள்கிறார்கள்.



ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெ

டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்

மது

